**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 236/2021

எ.ம.சா 1 முத்துக்குமார்

| | |
|---|---|
| Name | : முத்துக்குமார் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 11.06.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் 5ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளலராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. எம்.சி.ஒ.பி.237/2021 வழக்கில் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக கடந்த 23.08.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவாணை நகல் எ.ம.சா.ஆ1

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

4ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்களிடம் செய்யப்பட்ட காப்பீடு முழு காப்பீடு என்றால் சரிதான். மனுதாரர் எங்களது நிறுவனத்தை பொறுத்த வரை 3ம் தரப்பினர் என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரர் வாகனத்தை ஒட்டினார் என சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். மனுதாரர் 4ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்தில் மனுதாருக்கு காயம் ஏற்பட்டு கட்டவிரலில் காயம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் சரியாக வாகனத்தை இயக்கியிருந்தால் பின்னால் அமர்ந்த சென்ற மனுதாருக்கு காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. மனுதாரர் பயணம் செய்த வாகனம்

எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாருக்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியதாலும், 3ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல. எ.ம.சா.ஆ1 உத்தரவிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாருக்கு எங்களது நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார் நீதிபதி,
தென்காசி.